## ஊவா மகாண சபை - 2019

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

ஊவா மாகாண சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2020 செப்தம்பர் 04 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வெளியிடப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊவா மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக்

கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்தியுடனான தொடர்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1.6.1(அ) | ஊவா மாகாண நூலக சேவை சபைக்குரிய புத்தங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் புத்தகங்களின் பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| 1.6.1(ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாணசபையின் 03 நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட வர்த்தக முற்பணக் கணக்குகளில் செலுத்த வேண்டிய முற்பண மீதிகள் காண்பிக்கப்படா மையால் திரட்டிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தீர்க்கப்பட வேண்டிய முற்பண மீதி ரூபா 4,777,252 ஆக இருந்தது. | நிறுவனத்தின் தகவல் மற்றும் திரட்டிய நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்படும் தகவல்களுடன் இணங்க வேண்டும். |
| 1.6.1.(ஏ) | 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 40,326,651 ஆன கடன் தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1990 இன் 08 ஆம் இலக்க ஊவா மாகாண நிதி சாசனத்தின் X பந்தியின் பிரகாரம் அறவிடப்படுகின்ற முத்திரைக் கட்டணங்கள், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 129(2)(ஆ), நகரசபை சட்டத்தின் 158(2)(ஆ) மற்றும் மாநகர சபைகள் சட்டத்தின் 185(2)(இ) பிரிவுகளின் பிரகாரம் குறித்த உள்ளுராட்சி மன்றங்களின் நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது ஊவா மாகாண சபையினால் சேகரிக்கப்பட்ட ரூபா 331,997,565 ஆன முத்திரைக் கட்டணங்கள் உரிய உள்ளுராட்சி மன்றங்களுக்கு அனுப்பும் வரை பொறுப்பொன்றாக இனங்காணாமல் மாகாண சபையின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மாகாண சபையின் பொறுப்பொன்றாக இனங்கண்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | அறவிடப்படும் முத்திரைக் கட்டணங்கள மீண்டும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக காணப்படும் பொறுப்புக்கள சட்ட நிகழகத்தக்க பொறுப்பொன்றான தன்மையொன்றை எடுப்பதுடன் அதனை தீர்வு செய்வதற்கு நேர்ந்தால் 1993 இன் 05 ஆம் இலக்க முத்திரைக் கட்டண மாற்றல் நியதிச் சட்டத்தின் பிரகாரம் மீண்டும் கொடுப்பனவு செய்வதற்காக வருடாந்த நிதி சாசனத்தில் 1504 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. |
| (ஆ) | ஊவா மாகாண சபைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கின் செயற்பாடுகள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | மாகாண சபை நிதியத்திலிருந்து திட்டவட்டமாக செலுத்த வேண்டிய நிகழத்தக்க பொறுப்புக்கள் இனங்காணப்படாமையால் மாகாண சபை நிதியத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்க |

| | | | |
|---|---|---|---|
| | | | வில்லை. எதிர்காலத்தில் அத்தகைய நிச்சயிப்புக்கள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அபிவிருத்தி செலவினம் ரூபா 1,130,191,685 ஆக இருந்த போதும் விரிவான அட்டவணையின் பிரகாரம் அது ரூபா 1,123,153,786 ஆக இருந்தமையால் ரூபா 7,037,899 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும் தகவல்கள் அதற்குரிய அட்டவணையுடன் இணங்க வேண்டும் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி சரியாக இருப்பதுடன் அம்மீதியில் நிதிக்குத்தகை தவணை உள்ளடக்கப்பட்டமை இதற்கான காரணமாகும். |
| (ஈ) | மாகாண சபையின் கணக்கின் பிரகாரம் வரி மற்றும் வரியல்லாத வருமானம் ரூபா 3,666,120,917 ஆக இருந்த போதும் மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட செயலாற்றல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 3,677,321,463 ஆக இருந்தமையால் ரூபா 11,200,546 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | திரட்டிய வருமானக் கூற்றில் காணப்படும் தகவல்கள் திரட்டிய நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடப்பட வேண்டும். | நிலுவை வருமான சேகரிப்பு கணக்கீட்டின் பிரகாரம் திரட்டிய வருமானக் கணக்கு மற்றும் திரட்டிய நிதிக் கூற்றுக்களுக்கு இடையே வேறுபாடொன்று காணப்படுகின்றது. |

## 1.7. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| | ---------------------------------------- | -------------------------- | --------------- | ------------------------------ |
| (அ) | ஊவா மாகாண சபை நிதி விதிக் கோவை<br>------------------------------- | | | |
| (i) | நிதி விதி 104.2 | 2019 சனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் பதுளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 08 வாகனங்களுக்கு இடம்பெற்ற விபத்து தொடர்பாக நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | ஊவா மாகாண சபை நிதிவிதிக் கோவை 104.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்தந்த ஆண்டு ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | நிதி விதி 104.4 | பதுளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 08 வாகனங்களுக்கு இடம் பெற்ற விபத்து தொடர்பாக பூரண அறிக்கை சமர்ப்பித்தலில் 03 மாதங்கள் முதல் 1 ½ வருட கால தாமதம் இடம்பெற்றிருந்தது. | ஊவா மாகாண சபை நிதிவிதிக் கோவை 104.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விபத்துக்களுக்குரிய பொலிஸ் அறிக்கை எடுத்தல், மதிப்பீடு தயாரித்தல், ஆரம்ப புலனாய்வு செயற்பாடுகள், வழக்கு செயற்பாடுகள், காப்புறுதி மேவுகை மற்றும் மதிப்பீடு அங்கீகாரத்திற்காக கருத்திற்கொள்ள வேண்டிய காலம் எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கை<br>---------------------------------- | | | |
| | 2019 ஒக்தோபர் 28 ஆந் திகதிய 30/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை | பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்தினால் மீண்டும் சேவையில் ஈடுபடுத்திய 64 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள் ஓயூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2019 ஒக்தோபர் 28 ஆந் திகதிய 30/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு அனைத்து அமைச்சின் செயலாளர்களுக்கும் பிரதி பிரதான செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது |
| (இ) | சனாதிபதி செயலக சுற்றறிக்கை<br>-------------------------------- | | | |
| (i) | 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7.4 ஆம் பந்தி | மாகாண தலைமை அமைச்சர், மாகாண அமைச்சர்கள், மாகாண சபை தலைவர், மாகாண சபை பிரதி தலைவர் ஆகிய பதவிகளுக்குரிய உரித்தான படிகள் மாத்திரம் உரித்தாக வேண்டிய போதிலும் உறுப்பினருக்காக பெற்றுக்கொள்ளக்கூடிய படிகள் செலுத்தக்கூடாது. எனினும் சபை செயலகத்தினால் 2018 நவம்பர் மாதம் முதல் 2019 செப்தம்பர் மாதம் வரை உறுப்பினரொருவராக பெற்றுக்கொள்ளக்கூடிய படிகள் ரூபா 12,616,362 அப்பதவிகளுக்கு | 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7.4 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அமைச்சரவை தீர்மானம் மற்றும் பிரதான செயலாளரினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பேரில் சகல கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | | |
| (ii) | 1993 திசெம்பர் 31 ஆந் திகதிய PPA/61/1ஆம் இலக்க சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வெளிநாட்டு சுற்றுலாவிற்காக பங்குபற்றும் 05 உத்தியோகத்தர்களால் உத்தியோகபூர்வ சுற்றுலா நிறைவு பெற்று மீள சமூகமளித்ததன் பின்னர் 07 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. | 1993 திசெம்பர் 31 ஆந் திகதிய PPA/61/1ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறிக்கைகளை சமர்ப்பிக்காத உத்தியோகத்தர் களுக்கு அறிக்கைகளை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**2. வருமான நிர்வாகம்**

--------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய 05 வருமான விடயங்களில் நிலுவை வருமானங்களின் மொத்தம் ரூபா 201,246,725 ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் சிக்கலான நிலுவை வருமானத்தை பதிவழிபபதற்கு ஆலோசணை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபையின் நிதிய நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 3,320,573,725 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 3,281,879,774ஆக இருந்தது.

## 3.2 வருமான நிர்வாகம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான பொழிப்பொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

வருமானம்

| | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | **பாதிடப் பட்டவை** | **உள்ளபடி யானவை** | **முரண்** | **பாதிடப் பட்டவை** | **உள்ளபடி யானவை** | **முரண்** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம் | | | | | | |
| வரி வருமானம் | **4,877,230,000** | **3,199,744,392** | **(1,677,485,608)** | **3,711,650,000** | **3,137,004,798** | **(574,645,202)** |
| வரியல்லா வருமானம் | **477,705,000** | **477,577,071** | **(127,929)** | **608,350,000** | **570,836,175** | **(37,513,825)** |
| அரசாங்க மானியம் | **23,138,000,000** | **21,249,500,000** | **(1,888,500,000)** | **19,566,798,000** | **19,053,001,000** | **(513,797,000)** |
| **மொத்தம்** | **28,492,935,000** | **24,926,821,463** | **(3,566,113,537)** | **23,886,798,000** | **22,760,841,973** | **(1,125,956,027)** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனம் | 19,248,388,223 | 19,129,812,766 | 118,575,457 | 490,691,000 | 399,828,138 | 90,862,862 |
| ஏனைய மீண்டு வருபவை | 4,480,933,777 | 5,036,621,893 | (555,688,116) | 19,540,710,000 | 19,907,077,670 | (366,367,670) |
| உப மொத்தம் | 23,729,322,000 | 24,166,434,659 | (437,112,659) | 20,031,401,000 | 20,306,905,808 | (275,504,808) |
| அரசாங்க முதலீடு | 4,472,728,157 | 967,863,593 | 3,504,864,564 | 3,855,379,000 | 2,937,300,565 | 918,078,435 |
| **மொத்தம்** | **28,202,050,157** | **25,134,298,252** | **3,067,751,905** | **23,886,780,000** | **23,244,206,373** | **642,573,627** |

ஆண்டின் மொத்தச் செலவினமான ரூபா 25,134,298,252 தொகையில் மீண்டெழும் செலவினத்திற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 24,166,434,659 ஆக இருந்ததுடன் முதலீட்டிற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 967,863,593 ஆக இருந்தமையால் மானகாண சபையின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக மொத்த செலவினத்தில் 4 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. 1978 இன் அரசியலமைப்பின் 13 ஆவது உறுப்புரையின் திருத்தங்களின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள 07 வருமான விடயங்களில் வருமானம் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதியக் கணக்கு

### 4.1 ஊவா நவதோய நிதியம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1992 இன் 01 ஆம் இலக்கு ஊவா நவோதய நிதிய சாசனத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இந்நிதியம் செயலற்று காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா 32,039,853 ஆன நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலாக இந்நிதியத்தில் ரூபா 378,956 தொகை நடைமுறைக் கணக்கில் விளைவற்று தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | நிதியத்தை செயற்படுத்தி எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கௌரவ ஆளுனரினதும் தலைமை செயலாளரினது ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 செயலாற்றல்

#### 5.1.1 அரசின் மானியம்

| மூலம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை | குறைப்பயன்பாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபர் |
| மாகாண திட்டவட்டமான மானியம் | 559,000,000 | 302,000,000 | 257,000,000 |
| மாகாண வியடததிற்கான திட்டவட்டமான அபிவிருத்தி மானியம் (CBG) | 3,418,000,000 | 1,686,500,000 | 1,731,500,000 |
| உலக வங்கி உதவி | 450,000,000 | 250,000,000 | 200,000,000 |
| மொத்தம் | 4,427,000,000 | 2,238,500,000 | 2,188,500,000 |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் அபிவிருத்தி வேலைகளுக்காக ரூபா 4,427,000,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் பொது திறைசேரியிடமிருந்து நிதி கிடைக்காமையால் அதில் ரூபா 2,188,500,000 அதாவது 49 சதவீதம் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | நிதி ஏற்பாடுகளை உயர் அளவில் பயன்படுத்த வேண்டும் | பொது திறைசேரியிடமிருந்து போதியளவு நிதி கிடைக்காமை |

## 5.1.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்

மீளாய்வாண்டிற்காக மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய பணிகள் மற்றும் தொடர்வேலை ஆகியவற்றுக்காக ரூபா 3,155 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடைய 3,051 முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வேலை முன்மொழிவுகளின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு ஆகும்

| விபரம் | புதிய வேலை | தொடர் வேலை | மொத்த வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட | 2,277 | 306 | 2,583 |
| 50% ஐ விட குறைவாக பூர்த்தி செய்யப்பட்ட | 80 | 83 | 163 |
| 50% இற்கு மேல் பூர்த்தி செய்யப்பட்ட | 64 | 28 | 92 |
| ஆரம்பிக்கப்படாத | 209 | - | 209 |
| சர்ச்சைக்குரிய / பிரச்சினை நிலைமைக்குரியதான | 4 | - | 4 |
| மொத்தம் | 2,634 | 417 | 3,051 |

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த வேலை முன்மொழிவுகளில் 163 இல் 50 சதவீதத்திற்கு மேற்பட்டும் 92 வேலைகள் 50 சதவீதத்திற்கு குறைவாகவும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ஆரம்பக்கப்படாத வேலைகளின் எண்ணிக்கை 209 ஆக இருந்தது. | உடன்படிக்கைகளை மேற்கொண்டு செயற்திட்ட முன்மொழிவுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது திறைசேரியிடமிருந்து போதியளவு நிதி கிடைக்காமை |

| | | | |
|---|---|---|---|
| | மாகாண அபிவிருத்தி வேலைகளில் இவ்வாறான நிலைமையொன்று ஏற்படுவதற்கு பொது திறைசேரியிலிருந்து போதியளவு நிதி கிடைக்காமை காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2019 ஆம் திட்டவட்டமான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொனறாகல பிரதேச செயலக பிரிவிற்காக 701 செயற்திட்டங்கள் முன்மொழியப்பட்டு அதில் 693 அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் அதில் 532 அங்கீகரிக்கப்பட்டிருந்தன. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்ப்பட்ட செயற்திட்டங்கள் 193 ஆக இருந்தமையால் செயற்திட்டங்களை நிறைவேற்றல் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட எண்ணிக்கையில் 36 சதவீதமான மிகவும் குறைந்த பெறுமானத்தை எடுத்திருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்த வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் செயற்திட்டங்களுக்காக கட்டுநிதி கிடைத்த செயற்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |

### 5.1.3 பாடாசலை செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மஹியங்கன கல்வி வலயத்தின் 2019 ஆம் ஆண்டில் க.பொ.த (சா.த) பரீட்சை தோற்றிய மாணவர்களின் சித்தியடைதல் சதவீதம் 50 சதவீதத்திற்கு குறைந்த பாடசாலைகளின் எண்ணிக்கை 12 ஆக இருந்ததுடன் சதவீதமாக இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் உயர் தர பரீட்சையின் ஒவ்வொரு பாடப் பரப்பிலும் சித்தியடைதல் சதவீதம் 50 சதவீதத்தை விட குறைவாக இருந்த பாடசாலைகள் 06 ஆக | பரீட்சை பெறுபேறுகளை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பெறுபேறுகளை அதிகரிப்பதற்காக வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தது. புலமை பரிசில் பரீட்சையில் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை பரீட்சை பெறுபேறுகளின் வெட்டுப்புள்ளியின் பிரகாரம் 03 ஆண்டுகளில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் இருந்த பாடசாலைகள் 15 ஆக இருந்தன. | | |
| (ஆ) | 2016 சனவரி 07 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் ப/ஊவா மஹா வித்தியாலயத்தின் 31 ஆசிரியர்கள் 30-35 இடைப்பட்ட பாடவேலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருந்ததுடன் பிரதி அதிபர் வாரமொன்றுக்கு ஆகக்குறைந்த 10 பாட வேலைகள் கற்பித்தலில் ஈடுபட்டிருக்கவில்லை. | கல்வி அமைச்சின் செயலாளரின் 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மிகையாக இருந்த ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு எஞ்சிய ஆசிரியர்களுக்காக நேர அட்டவணைகள் வழங்கப்பட்டுள்ளன. பிரதி அதிபர்களுக்கு மேற்பார்வை மற்றும் நிர்வாக செயற்பாடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. |
| (இ) | பண்டாரவல கல்வி வலயத்தின் பாடசாலைகளில் க.பொ.த (சா.த) பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் 50 சதவீதத்திற்கு குறைந்த சதவீதத்தில் சித்தியடைந்த பாடசாலைகளின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டின் போது 18 உம், 2017 ஆம் ஆண்டின் போது 18 உம் 2018 ஆம் ஆண்டின் போது 12 ஆகவும் 2019 ஆம் ஆண்டின் போது 16 ஆகவும் இருந்தன. | பரீட்சை பெறுபேறுகளை மேம்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதிபர்கள் அழைக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. |
| (ஈ) | 2019 திசெம்பர் 04 ஆந் திகதி வரை பண்டாரவல கல்வி வலயத்தினுள் மாணவர் எண்ணிக்கை 50 இற்கு குறைந்த மூடும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள பாடசாலைகளில் எண்ணிக்கை 26 ஆக இருந்தது. | தேவையான வசதிகளை வழங்குதல், பெறுபேறுகளை அதிகரித்தல், போன்றவை மூலம் மாணவர்களை கவர்ந்து கொள்வதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் | மூடும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ள பாடசாலைகளை அதிலிருந்து விடுவிப்பதற்காக எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பண்டாரவல கல்வி வலயக் கல்வி அலுவலகத்தினால் பாடசாலை மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு செயற்பாடுகளுக்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,657,684 தொகையும் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,034,111 தொகையும் செலவிடப்பட்டிருந்தன. வெளிவாரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட பாடசாலைகளில் தரச் சுட்டெண் 60 சதவீதத்திற்கு குறைந்த பாடசாலைகள் 2018 ஆம் ஆண்டின் போது 34 பாடசாலைகளும் 2019 ஆம் ஆண்டின் போது 40 பாடசாலைகளும் காணப்பட்டன. அப்பாடசாலைகளின் தரச் சுட்டியை மேம்படுத்துவதற்காக உத்தேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்தொடர் நடவடிக்கைகள் மீள் ஊட்டல் நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பாடசாலைகளின் தரச் சுட்டியை மேம்படுத்துவதற்காக உத்தேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்தொடர் நடவடிக்கைகள் மீள் உட்டல் நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட வேண்டும். | வெளிவாரி மேற்பார்வைக்குரிய பின்தொடர் செயற்பாட்டை மேலும் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பாடசாலைகளின் தரச் சுட்டியை மேம்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது. |
| (ஊ) | பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்தின் கீழ் செயற்படுத்தப்படும் ஊவா மாகாண தொழில் முயற்சியாளர்களுக்கு அபிவிருத்தி வேலைக்குறிப்பு மேம்பாட்டிற்காக 2019 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட 03 இணையத்தளங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பிரதான நோக்கங்கள் நிறைவேற்றப் படாதிருந்ததுடன் 2020 பெப்ரவரி 11 ஆந் திகதி வரையில் Manpower.lk என்ற இணையத்தளம் செயலற்ற நிலைமையில் காணப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | Uvaproduct.lk இல் 600 இற்கு அண்மித்த அளவிலான ஊவா மாகாண தொழில் முயற்சியாளர்களுக்கு இணையத்தள பக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. Uvavisit.lk இல் 250 இற்கு மேற்பட்ட விடுமுறை கேந்திரங்கள் அண்மித்த அளவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. சுற்றுலா கைத்தொழில் நல்ல நிலைமைக்கு உட்படாததால் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. Manpower.lk என்ற இணையத்தளம் தற்போது |

| | | |
|---|---|---|
| | | செயற்பாட்டு நிலைமையில் காணப்படுகின்றது. |
| (எ) ஊவா மாகாண விவசாய திணைக்களத்திற்குரிய பிபில பயிற்சி நிலையத்தின் மூலம் தேசிய தொழில் தகைமை (NVQ-5) மட்டத்தில் பாடநெறிகள் ஆரம்பிப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக 2017 ஆம் ஆண்டின் போது விவசாயிகளின் நம்பிக்கை நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா 10,000,000 ஆன நிதிஏற்பாட்டினை பயன்படுத்தி 2018 செப்பதம்பர் வரை அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் 2020 பெப்ரவரி 25 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களான தேசிய தொழில் தகைமை (NVQ-5) மட்டத்தில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்க்பபட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 சனவரி மாதத்திலிருந்து பாடநெறிகளை ஆரம்பிக்க ஷ எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

### 5.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதான அமைச்சர் உத்தியோகத்தர் விடுதியில் சூரிய சக்தி மின்சார முறைமை பொருத்துவதற்காக பிரதி பிரதான செயலாளர் (பொறியியலாளர் சேவைகள்) அலுவலகத்தினால் ரூபா 6,024,310 தொகை செலவிடப்பட்டிருந்தது. சூரிய சக்தி மின்சார முறைமையிலிருந்து பிறப்பிக்கப்படும் மிகை மின்சாரத்தை தேசிய மின்சார முறைமைக்கு சேர்ப்பது தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் பரஸ்பர இணக்கப்பாடொன்று ஏற்படுத்தாமல் இருந்ததுடன் பிறப்பிக்கப்பட்ட மிகை மின்சாரத்திலிருந்து ஊவா மாகாண சபைக்கு நலனொன்று கிடைத்திருக்க | மாகாண சபைக்கு நலனொன்று கிடைக்கும் வகையில் மின்சார சபையுடன் இணக்கப்பாடொன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாகாண சபைக்கு நலனொன்று கிடைக்கும் நோக்கில் மின்சார சபையுடன் இணக்கப்பாடொன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படட்டு வருகின்றது |

| | | | |
|---|---|---|---|
| | வில்லை. அவ்வாறு சூரிய சக்தி மின்சார முறைமையை பொருத்தியதன் பின்னர் பிறப்பிக்கப்பட்ட மின் அலகுகளின் எண்ணிக்கை ஒப்பந்தக்காரரால் வெளியிடப்பட்ட மின் உற்பத்தி இயலளவுடன் ஒப்பிடப்படாதிருந்ததுடன் சூரிய சக்தி மின்சார முறைமையின் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக உடன்படிக்கைக்கு வந்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 2016 செப்தம்பர் மாதம் 03 ஆந் திகதி தல் 12 ஆந் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெறுவதற்கு உரிய பயிலுனர்களுக்கான கருத்தரங்கு மற்றும் நெட்போல் போட்டி பகுப்பாய்விற்காக சமூகமளிப்பதாக குறிப்பிடப்பட்டு இரண்டு உத்தியோகத்தரால் இலங்கை நெட்போல் சங்கத்தின் கடித தலைப்பை பயன்படுத்தி போலியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்காக 2019 யூன் 22 ஆந் திகதி வரை மேலும் 03 சந்தர்ப்பங்களில் 02 நாடுகளில் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக பங்குபெறச் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 265,337 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. | புலனாய்வு நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்து உரிய நடைமுறகளை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக ஆரம்ப விசாரணையொன்று நடாத்தப்பட்டு வருவதுடன் இந்த சம்பவத்தின் பின்னர் ஒரு உத்தியோகத்தர் இரண்டு சநதர்ப்பங்களில் மீண்டும் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக சமூகமளித்திருந்தார். அதன் போது அவருக்கு எதிராக காணப்படும் ஒழுக்காற்று பரிசோதனையில் குற்றவாளியானால் அல்லது வெளிநாடு விடுமுறை அங்கீகரிக்கப்படாவிட்டால் அவருக்கு கொடுப்பனவு செய்த படிகளை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக எழுத்துமூலம் இணங்கப்பட்டு அதற்கு ஆளுனரின் அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |
| (இ) | மாகாண விவசாய அமைச்சினால் விதை உருளைக் கிழங்கு இறக்குமதி செய்து பகிர்ந்தளிப்பது தொடர்பாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,509,070 ஆன கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரசாங்க உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பாக உரிய நிறுவனங்களின் தாபன |

| | | | |
|---|---|---|---|
| | | | தலைவர் அறிவூட்டப்பட்டு தவணையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரின் 1759/39 ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம் காணி கையேற்கும் சட்டத்தன் 38(அ) உப கட்டளையின் கீழ் 2012 மே 25 ஆந் திகதி 0.888 ஹெக்டேயர் பரப்பளவுடன் கூடிய மொனறாகலை ஜீலோன் விடுதியுடன் கூடிய காணியின் உடமை ஊவா மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அதன் உரித்து காணி உறுதியிலிருந்து முறைப்படி கையேற்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரித்து காணி உறுதியொன்று மூலம் முறையாக கையேற்கப்பட வேண்டும். | மாவட்ட விலை மதிப்பீட்டாளரால் காணி சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையிடமிருந்து விரிவான அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளதுடன் அது கிடைத்தவுடன் எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஜீலோன் சுற்றுலா விடுதியிலிருந்து உழைத்த வருமானம் ரூபா 1,662,600 ஆக இருந்ததுடன் அக்காலப்பகுதியில் ஊழியர் சம்பளமாக மாத்திரம் ரூபா 3,204,463 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப் பட்டிருந்ததால் ரூபா 1,541,863 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | வருமானத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது நுழைவு வீதியில் காணப்படும் சிக்கலினால் சுற்றுலா பிரயாணிகள் வருகை குறைான மட்டத்தில் காணப்பட்டாலும் எதிர்வரும் காலங்களில் வீதி அபிவிருத்தி மூலம் சுற்றுலா பிரயாணிகள் வருகை அதிகரித்து வருமானம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ஊ) | புதுருவெவ அண்மித்து படகு சேவையொன்று நடாத்திச் செல்வதற்காக நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு 06 படகுகள் மற்றும் 30 உயிர் காப்பு அங்கிகள் கொள்வனவு செய்வதற்கு 2018 ஒக்தோபர் வரையிலும் ரூபா 785,882 செலவிடப்பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சுற்றுலா படகு சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை துரிதமாக பூர்த்தி செய்த சுற்றுலா படகுவேவையை ஆரரம்பிப்தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.2019 ஆம் ஆண்டில் | 2019 ஆம் ஆண்டில் சுற்றுலா அமைச்சின் மூலம் இப்படகு சேவை ஆரம்பிப்பதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதிஏற்பாடு மட்டுப்படுத்தப்பட்டமையால் எஞ்சிய வேலையை பிரதேச சபை ஊடாக மேற் கொள்ளப்பட உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | ஊவா மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, சுற்றுலா, போக்குவரத்து, கலாசார மற்றும் புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சின் ஒதுக்கீட்டுக் மூலம் 2013 ஆம் ஆண்டின் போது நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட உடவளவ சுற்றுலா விடுதிக்காக 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 39,824,944 தொகை செலவினமாக ஏற்பட்டிருந்த போதும் 2020 யூலை 29 ஆந் திகதி ஒய்வு அறை மற்றும் கடைகள் சுற்றுலா பிரயாணிகளுக்காக திறந்து வைக்கப்படவில்லை. | ஓய்வறை மற்றும் கடை அறைகள் சுற்றுலா பிரயாணிகளுக்கு துரிதமாக திறந்து வைக்கப்பட வேண்டும். | 08 கடை அறைகளை குத்தகைக்கு பெற்றுக் கொள்வதற்காக கொள்வனவாளர் முன்வந்துள்ளதுடன் சிற்றுண்டிச்சாலை மற்றும் சமையலறை என்பவற்றுக்காக கிடைத்த கூறுவிலை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஐ) | கித்துல்கொட சுற்றுலா வசதிகள் நிலையத்தின் சமைலறை, சிற்றுண்டிச்சாலை மற்றும் மலசல கூட முறைமை நிர்மாணிப்பதற்காக ரூபா 27,016,820 கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 2020 யூலை 29 ஆந் திகதி வரை அக்கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது. | விரைவில் பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் பேரல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி விலை கோரப்பட்டதுடன் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (ஒ) | ஹப்புத்தளை மாவட்ட வைத்தியசாலைக்காக நீரினைப் பெற்றுக் கொள்ளும் இயற்கை நீர் ஊற்றில் நீருக்கு கால்நடைகளின் எச்சம் சேர்வதன் காரணமாக குடிப்பதற்கு பொருத்தமற்றதென பொது சுகாதார பரிசோதகர்களால் உறுதிப்படுத்தியுள்ளமையாலும் கோடை காலங்களில் அந்நீர் ஊற்று வற்றிப் போவதால் வைத்தியசாலைக்கு அத்தியவசிய குடிநீர் வழங்கலுக்கு மாற்றுவழி வேலைத்திட்டமொன்று செயற்படுத்தியிருக்கவில்லை. | சிக்கலுக்கு தீர்வு காண்பதறகாக துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாகாண திட்டவட்டமான மானியங்கள் கிடைக்காமை காரணமாக செயற்திட்டத்தை செயற்படுத்த முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 2018 ஆம் ஆண்டில் ஊவா மாகாண விளையாட்டு அமைச்சின் மூன்று உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய 02 வெளிநாட்டு சுற்றுலாக்களுக்காக அமைய மற்றும் இணைந்த படிகளாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,051,152 தொகை 705-52-7-2-2109(2) ஆம் இலக்க உட்கட்டமைப்பு வசதிகள் விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | செலவின விடயங்களுக்குரிய கொடுப்பனவு நிர்ணயிக்கப்பட்ட செலவின விடயங்களின் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஔ) | பொது வைப்புக்களின் கால பகுப்பாய்வின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளை மிகைத்த நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் தீர்வுசெய்யப்படாத 26 நிறுவனங்களுக்குரிய வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 90,233,501 ஆக இருந்தது. | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தீர்வு செய்யுமாறு நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (க்) | ஊவா மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் 52 நிறுவனங்களிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணித்த, ஓய்வுபெற்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் வேலையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 44,712,331 ஆன கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் ஊவா மாகாண நிதி விதி 485(4) மற்றும் ஊவா மாகாண சபையின் பிரதான செயலாளரின் 2004 சனவரி 08 ஆந் திகதிய 2004/01 ஆம் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | கடன் மீதிகளை தீர்க்கவும் தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (க) | ஊவா மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் 13 நிறுவனங்களிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் அறவிடப்பட வேண்டிய ரூபா 17,033,713 ஆன கடன் மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் ஊவா மாகாண நிதி விதி 485(4) மற்றும் ஊவா மாகாண | கடன் மீதிகளை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | சபையின் பிரதான செயலாளரின் 2004 சனவரி 08 ஆந் திகதிய 2004/01 ஆம் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (கா) | 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 40,319,651 ஆன அறவிடப்பட வேண்டிய கடன் தொகை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகளை தீர்க்கவும் தீர்வுசெய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெவ்வேறு காலப்பகுதிகளில் அரசியல் தலையீடுகளின் பேரில் விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளில் அறவீடு குறைவடைந்துள்ளது.<br><br>10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தமையால் அறவிட வேண்டிய மீதிகளை அறவீடுகள் குறைவடைந்ததுள்ளன. அட்டவணைகள் இல்லாமையால் ஊக்குவிப்பு மீதிகளை அறவிட முடியாதுள்ளது. |
| (கி) | 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.4, 2.5 மற்றும் 2.6 ஆம் பந்தியின் பிரகாரம் மொனறாகலை பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தினால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நியமிக்கப்பட்டிருந்த பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை | 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவித்திருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (கீ) | மொனறாகலை பிரதேச செயலகத்தினால் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 5 காணிகளுக்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 24,690,528 ஆன நிலுவை தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண காணி ஆணையாளர் மற்றும் காணி ஆணையாளர் நாயகத்தின் ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**5.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூன்று அங்கத்தவர்கள் 2018 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் கூட்டங்கள் நடாத்தப்பட்ட 33 நாட்களில் 10-17 நாட்களுக்கு இடைப்பட்ட நாட்கள் சமூகமளிக்காமல் இருந்ததுடன் 2019 சனவரி 01 முதல் யூலை 30 ஆந் திகதி வரை நடைபெற்ற 24 கூட்டத் தொடர்களில் 9-10 இற்கு இடைப்பட்ட அளவில் சமூகமளித்திருக்கவில்லை. எனினும் அக்காலப்பகுதியில் அந்த மூன்று அங்கத்தவர்களுக்கு படிகளாக ரூபா 1,368,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கூட்டங்களுக்காக தொடர் பங்களிப்பினை வழங்க வேண்டும். | மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூன்று அங்கத்தவர்களின் வருகை அல்லது செயற்பாடுகள் தொடர்பாக 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகளின் சட்டத்தின் ஏற்பாடுகள் பொருந்தாது. அங்கத்தவர்கள் வராவிட்டாலும் அவர்களுக்குரிய மாதாந்த படிகளை சட்டத்தின் 35(5) பிரிவின் பிரகாரம் செலுத்தப்படும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெள்ளவாய ஆதார வைத்தியசாலையில் இருந்த ரூபா 697,172 பெறுமதியான 97 மருந்து வகைகளில் 13,553 அலகுகள் காலாவதியாகி இருந்தன. | முறையான இருப்புக் கட்டுப்பாட்டு முறையொன்று பின்பற்றப்பட வேண்டும். | காலாவதியான மருந்துகள் அனைத்தும் 2019 திசெம்பர் 29 ஆந் திகதி கைதவிர்க்கப் பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை 'பீ' செயற்திட்டத்தின் கீழ் ரூபா 24,225,403 ஆன நிதி ஏற்பாடுட்டின் பேரில் மொ/ போதாகம மஹா வித்தியாலயத்தின் விஞ்ஞானம், கணிதம், ஈ நூலகம், தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் கனிஷ்ட விடுவிப்பு ஆய்வுகூட கட்டிட நிர்மாணங்களுக்காக பாடசாலை வளவில் காணப்பட்ட 8 மரங்கள் 2016 ஆகஸ்ட் மாதம் வெட்டி அகற்றப்பட்டிருந்த போதும் அந்நிர்மாணம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாத கைத்தொழில்களை இரத்துச் செய்வதற்கு எடுத்த தீர்மானத்தின் பேரில் 2017 மார்ச் 17 ஆந் திகதி நிர்மாணங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. |
| (ஈ) | மொனறாகலை பிரதேச செயலகத்தினால் காணி கச்சேரி மூலம் இனங்காணப்பட்டு 08 குத்தகைகள் நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கு பரிந்துரை வழங்கப்பட்டு 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 5 ஆண்டுகள் முதல் 24 ஆண்டுகள் கடந்திருந்த போதும் காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகைக்கு வழங்கி உரிய குத்தகை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த காணி தொடர்பாக வனப் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. |

## 5.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 5.4.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒக்கம்பிட்டிய விதை உற்பத்தி பண்ணைக்குரிய 02 உழவு இயந்திரங்கள் மற்றும் இணைந்த அறுவடை செய்யும் இயந்திரம் என்பன 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | சொத்துக்களைப் பயன்பாட்டிற்கு எடுக்க அல்லது கைதவிர்க்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2021 ஆம் ஆண்டில் ஏலவிற்பனை செய்வதற்கு பிரதி பிரதான செயலாளர் (நிதி) இற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | விவசாயத் திணைக்களத்திற்குரிய வெளிமட உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலக வளவில், 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 280,000 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட 8x20 மீற்றர் அளவின இரண்டு பாதுகாப்பு பயிரிடல் குகை 2014 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டன. | பயன்பாட்டிற்கு எடுக்க அல்லது கைதவிர்க்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | திருத்தம் செய்யப்பட வேண்டிய இரண்டு பசுமை ஆய்வகங்களை திருத்தியமைத்து பசுமை ஆய்வகங்களாக பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டு அதன்மூலம் விவசாயிகளுக்கு பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. |

### 5.4.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண கட்டிட திணைக்களத்திற்குரிய கெப் வண்டியொன்று 2018 மே 08 ஆந் திகதி விபத்திற்குட்பட்டதால் ஏற்பட்ட ரூபா 237,912 ஆன நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக பொறுப்பான தரப்பினரை | மாகாண நிதி விதி 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நட்டத்தின் ஒரு பகுதி காப்புறுதியிடமிருந்து பெறப்பட்டுள்ளது. ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | நிச்சயிப்பதற்காக மாகாண நிதி விதி 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) | ஒக்கம்பிட்டிய விதை பண்ணையில் அமைய அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்திய ஊழியர்களுக்காக 2010 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2013 மே 31 வரை காலப்பகுதிக்குரிய ஊழியர் சேமலாப நிதியத்திற்குரிய பங்களிப்புத் தொகை கொடுப்பனவு செய்யாத காரணத்தினால் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 376,374 ஆன மிகை கொடுப்பனவுகளாக செய்யப்பட்டிருந்தது. | இடம்பெற்றுள்ள நட்டங்களை மேவுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 மே 30 ஆந் திகதிய ஊவா மாகாண விவசாய அமைச்சு செயலாளரின் 7/2/2/7-2 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மேற் கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் இத்தொகை விவசாய பண்ணை முற்பணக் கணக்கிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. |

### 5.4.3 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ராவணாஅல்ல பார்வைகூடத்தின் நிர்மாணம் | | |
| | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2015 யூலை 23 ஆந் திகதிய மண் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் ராவணாஅல்ல பார்வைகூடத்தின் நிர்மாணிப்பதற்காக உத்தேச இடத்தில் அத்திவாரம் இடுவதற்கு முன்னர் பாறைகளின் பள்ளமான இடத்தில் பகுப்பாய்வொன்றை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் பிரதி பிரதான செயலாளரால் (பொறியியலாளர் சேவை) 2015 நவம்பர் 11 ஆந் திகதி நிர்மாண | மாகாண சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக பொறுப்பான நபர்கள் இனங்காணப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் உறதியற்ற இடமாகையால் குறித்த தரப்பினருடன் கலந்துரையாடி முதலாவது நிர்மாணத்தை இடைநிறுத்தி பின்னர் வேலை பூர்த்தி செய்யப்பட்டது. |

வேலைகளுக்காக ரூபா 6,460,382 உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிர்மாண இடத்தின் தகுதி தொடர்பாக உருவாகியுள்ள சிக்கல் காரணமாக 2016 செப்தெம்பர் 14 ஆந் திகதி உடன்படிக்கை பரஸ்பர இணக்கத்துடன் இரத்துச் செய்யப்பட்டிருந்துடன் அது வரை ஒப்பந்தத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 967,042 தொகை விளைவற்ற செலவினமொன்றாக இருந்தது. குறித்த நிர்மாணத்திற்காக மீண்டும் 2018 நவம்பர் 22 ஆந் திகதி பிரதி பிரதான செயலாளரால் (பொறியியலாளர் சேவை) 2015 நவம்பர் 11 ஆந் திகதி நிர்மாண வேலைகளுக்காக ரூபா 9,765,004 உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 2019 செப்தம்பர் 04 ஆந் திகதி நிர்மாணத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ஆ) ஹாலிஎல கணனி வளங்கள் பயிற்சி நிலைய நிர்மாணம்

---

பிரதி பிரதான செயலாளரால் (பொறியியலாளர் சேவை) 2016 யூன் 27 ஆந் திகதி ஒப்பந்தக் கம்பனியொன்றுடன் ரூபா 68,848,145 ஆன பெறுமதிக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 2016 ஆகஸ்ட் 29 ஆந் திகதி முற்பணமாக ரூபா 13,760,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2017 யூன் 21 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா

குறித்த பணத்தை அறவிடுவதற்கும் நிர்மாண வேலையை விரைவில் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒப்பந்தக்காரர் தொடர்பில் மாகாண நிதி விதிக் கோவையின் 705 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மாகாண சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை

முற்பண பிணை மற்றும் செயலாற்றல் பிணையை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய பணம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| 3,422,407 ஆக இருந்த போதும் 2018 ஏப்ரல் 24 ஆந் திகதி வரை ரூபா 1,721,204 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் 09 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் மாகாண நிதி விதி 705 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரர் கறுப்பு பட்டியலில் இடப்பட்டிருக்கவில்லை. முற்பணத் தொகையில் ரூபா 1,740,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் முற்பண பிணையின் செல்லுபடிக் காலம் 2018 செப்தம்பர் 21 ஆந் திகதி முடிவடைந்தமையால் முற்பணத்தை முழுமையாக தீர்ப்பதற்கு அல்லது பிணைப் பொறுப்பின் செல்லுபடிக் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 12,020,000 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.<br>செயலாற்றல் பிணைப்பொறுப்பின் செல்லுபடிக் காலம் 2019 யூலை 31 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் ஒப்பந்தக்காரரின் எதிர்பார்த்த செயலாற்றல் மட்டம் அடையப்படாததன் காரணமாக பிணை பொறுப்பின் மூலம் அறவிடக்கூடியதாக இருந்த ரூபா 3,443,000 தொகையையும் அறவிட முடியாமல் போயிருந்தது. | மேவுகை செய்யப்பட வேண்டும். | |
| (இ) லுனுகெம்வெஹெர ஆயுர்வேத வைத்தியசாலையின் சமையலறை மற்றும் மருந்து தொழிற்சாலையை நிர்மாணித்தல்<br>---------------------------------------------------------------------<br>பிரதி பிரதான செயலாளரால் (பொறியியலாளர் சேவை) 2018 செப்தம்பர் 25 ஆந் திகதி ஒப்பந்தக் காரரொருவருடன் ரூபா 3,024,605 ஆன பெறுமதிக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2019 | குறித்த பணத்தை அறவிடுவதற்கும் ஒப்பந்தம் தொடர்பாக மாகாண நிதி விதிக் கோவையின் 705 இன் பிரகாரம் நடவடிக்கை | ஒப்பந்தகாரருக்க செலுத்த வேண்டிய தொகையில் ரூபா 359,790 தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சியவற்றை ஒப்பந்தக்காரருக்குரிய ஏனைய |

| | | | |
|---|---|---|---|
| | மார்ச் 18 ஆந் திகதி வரை முற்பணத்துடன் ரூபா 1,107,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தம் உரிய திகதியில் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக 2019 நவம்பர் 29 ஆந் திகதி உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 151,230 அறவிடப்பட்டிருக்கவில்லை.<br><br>முற்பண பிணையின் செல்லுபடிக் காலம் 2019 யூன் 20 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் ரூபா 907,000 ஆன முற்பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. செயலாற்றல் பொறுப்பின் செல்லுபடிக் காலம் 2019 செப்தெம்பர் 24 முடிவடைந்திருந்ததுடன் ரூபா 151,300 ஆன செயலாற்றல் பிணையையும் அறவிட முடியாமல் போயிருந்தது. | எடுத்தல் வேண்டும். | நிர்மாணங்களுக்கு செலுத்த வேண்டிய பணத்திலிருந்து அறவிடுவதன் மூலம் முற்பணத்தை தீர்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | பிபில ஆதார வைத்தியசாலையின் நிர்வாக கட்டிடத்தை நவீனமயப்படுத்தல்<br>----------------------------------------------------------------------<br>பிரதி பிரதான செயலாளரால் (பொறியியலாளர் சேவை) 2017 திசெம்பர் 12 ஆந் திகதி ரூபா மேற் கொள்ளப்பட்டிருந்தது. நிர்மாண வேலையை நிறைவேற்றவதற்காக தெரிவுசெய்யப்பட் ஒப்பந்தக்காரர் கடந்த 05 ஆண்டுகளில் ரூபா 35 மில்லியன் பெறுமதியான கட்டிட நிர்மாணமொன்றை வெற்றிகரமாக நிறைவேற்றிமை மதிப்பீட்டு நியதியாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் இந் நியதியை பூர்த்தி செய்திருக்கவில்லை. தகைமைகளை பூர்த்தி செய்திராத ஒப்பந்தக்காரரொருவருக்கு ஒப்பந்தத்தை | தேசிய பெறுகை குழு ஆணைக்குழுவின் பொது செயலாளரின் NPC/ASG-02/DPI/ 2017/ C-46 ஆம் இலக்க 2019 பெப்ரவரி 20 ஆந் திகதிய கடிதத்தின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும். | பிரதி பிரதான செயலாளரால் (பொறியியலாளர் சேவை) குழுவொன்று நியமிக்கப்பட்டு நடவடிக்கை எடுத்துவருவதுடன் பரிசோதனை செயற்பாடுகள் பூர்த்தி செய்து அதன் செயன் முன்னேற்றத்தை எதிர்காலத்தில் அறிக்கையிடுகின்றேன். |

வழங்கியமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தேசிய பெறுகை குழு ஆணைக்குழுவின் பொதுச் செயலாளர் 2019 பெப்ரவரி 20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஊவா மாகாண சபையின் பிரதான செயலாளருக்கு அறிவித்திருந்த போதும் 2019 திசெம்பர் 24 ஆந் திகதி வரையிலும் தேசிய பெறுகை குழு ஆணைக்குழுவின் பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) பிபில விவசாய பயிற்சி நிலைய வளவில் உத்தியோகபூர்வ விடுதியொன்றை நிர்மாணித்தல்

| | | |
|---|---|---|
| மாகாண விவசாயத் திணைக்களத்திற்குரிய பிபில விவசாய பயிற்சி நிலைய வளவில் விவசாய மதியுரையாளர்களுக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்றை நிர்மாணிப்பதற்கான நிர்மாண வேலைக்காக ரூபா 5,848,901 தொகைக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 2018 திசெம்பர் 14 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 2019 பெப்ரவரி 10 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் 2020 பெப்ரவரி 25 ஆந் திகதி அதன் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்பட்டு நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப் பட்டிருந்ததுடன் 2019 ஆகஸ்ட் 07 ஆந் திகதி வரை இந்நிர்மாணத்திற்காக ரூபா 2,725,948 தொக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உடனபடிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் தொடர் நிர்மாணமொன்றாக மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளடக்கி நிதி ஆணைக் குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | தியதலாவ தேசிய உணவகத்தின் ஓய்வறையும் மலசலகூட முறைமையும் நிர்மாணித்தல் | | |
| | மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் தியதலாவ தேசிய உணவகத்தின் ஓய்வறையும் மலசலகூட முறைமையின் நிர்மாண வேலைக்களுக்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,296,012 தொகை பேராதனை விவசாயத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும் 2020 பெப்ரவரி 25 ஆந் திகதி வரையிலும் அந்நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஓய்வறையும் மலசலகூட முறைமையினது நிர்மாண வேலைகளை விரைவில் பூர்த்தி செய்தல் வேண்டும். | அரசின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ள தொகையான ரூபா 1,190,338 தொகை மீண்டும் கையளிக்குமாறு பேராதனை விவசாயத் திணைக்களத்தினால் வேண்டுகோள் விடப்பட்டிருந்தது. அப்பணம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் ஏனைய கேள்விதாரர் மூலம் குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

### 5.5 பதவியணியினர் நிர்வாகம்

#### 5.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) மாகாண சபை, அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் (பாடசாலை பதவியணியினர் நீங்கலாக)**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | **1447** | 996 | 451 | - |
| (ii) | மூன்றாம் நிலை | **310** | 196 | 114 | - |
| (iii) | இரண்டாம் நிலை | **7846** | 6510 | 1336 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 5865 | 5177 | 688 | - |
| (v) | ஏனைய | | | | |
| | - அமைய | - | 522 | - | 522 |
| | - ஒப்பந்தம் | - | 278 | - | 278 |
| | மொத்தம் | 15468 | 13679 | 2589 | 800 |

**(ஆ) பாடசாலை பதவியணியினர்**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | அதிபர்கள் | 1077 | 678 | 399 | - |
| (ii) | ஆசிரியர்கள் | 16384 | 17467 | - | 1083 |
| (iii) | உதவிப் பதவியணியினர் | 2464 | 2822 | - | 358 |
| (iv) | ஏனைய | | | | |
| | அமைய | - | 14 | - | 14 |
| | ஒப்பந்தம் | - | 14 | - | 14 |
| | **மொத்தம்** | 19925 | 20995 | 399 | 1469 |

### 5.5.2 மாகாண சபை ஏனைய பதவியணியினர் நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 03/2019 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் முன்அங்கீகாரமின்றி 07 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை நாடளாவிய சேவை மற்றும் அதற்கு சமமான சேவைகளில் பதவிகளுக்காக நியமிக்கப்பட்டிருந்துடன் முகாமைத்து சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாத விவசாய நிபுணர் பதவிக்காக ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | 2019 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 03/2019 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 03/2019 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக வரிசை அமைச்சிற்கு பரிந்துரைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

### 5.5.3 கல்வி தொடர்பான பதவியணியினர் நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மஹியங்கன கல்வி வலயத்தில் ஒரே சேவை நிலையத்தில் 10 வருடங்களுக்கு மேல் சேவை புரிந்த 249 ஆசிரியர்கள் காணப்பட்டதுடன் ஆசிரியர் சேவைகள் பிரமாணக் குறிப்பிற்கு உள்ளடக்கப்படாத ஆசிரிய ஆலோசகர்கள் பதவிகளுக்காக 27 ஆசிரியர்கள் வலயக் கல்வி அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிபர் பதவிகளுக்காக எழுத்து மற்றும் நேர்முக பரீட்சைகளின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட ஆட்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் 1-2(I), 2(II) மற்றும் 3(I) தர ஆசிரியர்கள் முறையே 13,10, 07 மற்றும் 04 பேர் வீதம் நியமிக்கப்பட்டிருந்தனர். | ஆசிரியர் இடமாற்றக் கொள்கை, ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவைபுரிந்த 89 ஆசிரியர்களுக்காக இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தன பாடசாலையில் சேவை புரியும் அதிபர் ஓய்வுபெறும் போது அவர்களால் இனங்காணப்பட்ட சிரேஷ்ட ஆசிரியொருவருக்கு சம்பவக் குறிப்பு மூலம் கடமைகள் கையளிக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) மஹியங்கன கல்வி வலயத்திற்கு நியமிக்கப்பட்ட 24 ஆசிரியர்கள் சம்பளம் பெறுகின்ற பாடசாலைகளின் சேவை தேவைப்பாட்டை இனங் காணாமல் மாற்று பதிலாள் ஒருவர் இல்லாமல் வலயத்திற்குள் மற்றும் வலயத்திற்கு வெளியேயும் மாகாண பாடசாலைகளுக்கும் தேசிய பாடசாலைக்கும் இணைக்கப்பட்டிருந்தனர். | சம்பளம் பெறுகின்ற பாடசாலைகளின் சேவை தேவையையும் நியமன நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்ந்தும் இணைக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 08 ஆகும் |
| (இ) ப/ஊவா மஹா வித்தியாலயத்தின் 2019 நவம்பர் 18 இல் உள்ளவாறு 07 ஆசிரிய | நியமன நிபந்தனைகள், ஆசிரியர் இடமாற்றக் கொள்கை, ஆசிரியர் | 03 ஆசிரியர் பற்றாக்குறை 06 ஆசிரியர்களுக்கான மிகையும் பாடசாலை சம்பள |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்கள் மற்றும் 15 ஆசிரியர்களுக்கான மிகையும் காணப்பட்டதுடன் பாடசாலை சம்பள பதிவேட்டில் சம்பளம் பெறும் 07 ஆசிரியர்கள் மாகாண பாடசாலைகளுக்கும் தேசிய பாடசாலைக்கும் இணைக்கப்பட்டிருந்தனர். | சமப்படுத்தல் மற்றும் பாடசாலை தேவைப்பாடு சேவை தேவைப்பாடு மற்றும் எடுக்கப்பட வேண்டும் | பதிவேட்டில் சம்பளம் பெறும் 06 ஆசிரியர்கள் மாகாண பாடசாலைகளுக்கும் தேசிய பாடசாலைக்கும் இணைக்கப்பட்டுள்ளனர். |
| (ஈ) | 2019 யூன் 30 இல் உள்ளவாறு வெளிமட கல்வி வலயத்தின் 95 பாடசாலைகளில் 375 ஆசிரியர் வெற்றிடங்களாக இருந்ததுடன் மிகை 22 ஆக இருந்தது. அதில் 39 பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை 5-21 வரை காணப்பட்டது. | வெற்றிடங்களைப் பூர்த்தி செய்து ஆசீயர் சமப்படுத்தலை ஏற்படுத்துவுதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் காலத்தில் ஆசிரியர் சமப்படுத்தலை மேற்கொண்டு பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையை சமப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | வெளிமட கல்வி வலயத்தின் பாடசாலைகளில் இருந்து சம்பளம் பெறும் இரண்டு ஆசிரியர்கள் வேறு கல்வி வலயங்களின் பாடசாலைகளுக்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் வேறு வலயங்களின் பாடசாலைகளிலிருந்து சம்பளம் பெறும் 16 ஆசிரியர்கள் வெளிமட கல்வி வலயத்தின் பாடசாலைகளுக்கு இணைக்கப்பட்டிருந்தனர். இந்த இணைப்பு மாற்று பதிலாள் இல்லாமலும் பாடசாலைகளின் சேவைத் தேவைப்பாடு இனங்காணாமலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | சம்பளம் பெறும் பாடசாலைகளின் தேவைப்பாட்டிற்கும் நியமன நிபந்தனைகளின் பிரகாரமும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேறு கல்வி வலயங்களின் பாடசாலைகளிலிருந்து சம்பளம் பெறும் ஆசிரியர்களில் 12 பேர் தற்போது வெளிமட வலயத்தின் பாடசாலைகளில் சேவை புரியாமல் இருப்பதுடன் 4 பேர் வெளிமட வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளனர். |
| (ஊ) | பண்டாரவல கல்வி வலயத்தின் 73 பாடசாலைகளில் 10 வருடங்களுக்கு மேல் ஒரே சேவை நிலையத்தில் சேவை புரிந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 326 ஆக இருந்தனர். | ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 64 ஆசிரியர்கள் 57 வயதை மிகைத்தவர்களாக இருந்ததுடன் 110 பேர் 55 வயதை தாண்டியவர்களாக இருந்தனர்.<br>27 பேர் நியமன நிபந்தனைகளின் பிரகாரம் குறைந்தது 10 வருடங்கள் நியமனம் பெற்ற பாடசாலைகளில் சேவை |

| | | |
|---|---|---|
| | | புரிய வேண்டியவர்களாவர். ஏனைய ஆசிரியர்ககள் படிப்படியாக இடமாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். |

## 5.6 உள்ளூராட்சி நிறுவனங்களின் மேற்பார்வை

### 5.6.1 நிலுவை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டிற்காக ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி நமன்றங்களால் அறவிட ஆதனவரி மற்றும் ஏனைய நிலுவை வருமானங்கள் ரூபா 954,781,842 ,ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிலுவை வருமானத்தை அறவிடுவது தொடர்பாக உரிய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர். |
| (ஆ) மாநகர கட்டளைச் சட்டம், நகர சபை (திருத்த) சட்டம் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 129(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 114,982,672 ஆன நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 242,218,261 ஆன முத்திரைக் கட்டணங்கள் ஆக இருந்தன. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் என்பவற்றை அந்நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உள்ளூராட்சி நிறுவனங்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டதுடன் பின்னர் மாகாண விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்த அனைத்து முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணத்தை தாமதமின்றி அந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. |

5.6.2 **வழங்கப்பட்டுள்ள மிகை அறவீட்டுச் சான்றிதழ்களுக்காக அறவிடுவதற்குள்ள தொகை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த மிகை அறவீடுகளுக்காக ரூபா 5,877,851 தொகை அறவிட வேண்டியிருந்தது. | சட்டரீதியான ஏற்பாடுகளின் மிகை அறவீட்டை மேற்கொள்ள வேண்டும். | மிகை அறவீட்டை மேற்கொள்ள உரிய தரப்பினர் தெரியப் படுத்தப்பட்டனர். |

**5.7 ஆண்டறிக்கையினை சமர்ப்பித்தல்**

கடந்த 05 வருடங்களில் ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளை மாகாண சபைக்கு முன்னிலைப்படுத்தலின் நிலைமை பின்வருமாறு ஆகும்.

| **ஆண்டு** | **அறிக்கை வழங்கப்பட்ட திகதி** | **சபையில் முன்வைக்கப்பட்ட திகதி** |
| --- | --- | --- |
| 2014 | 2015.09.21 | 2016.07.14 |
| 2015 | 2016.12.06 | 2017.02.20 |
| 2016 | 2017.08.21 | 2017.09.28 |
| 2017 | 2018.09.28 | 2018.10.25 |
| 2018 | 2019.05.29 | 2019.06.13 |

**5.8 தீர்வு செய்யப்படாத கணக்காய்வு பந்திகள் தொடர்பான அவதானிப்புக்கள்**

பின்வரும் கணக்காய்வுப் பந்திகள் தொடர்பாக 2017 மார்ச் 23 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குக் குழு கட்டளைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------------- | --------------------- | ---------------------------- |
| (அ) | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிரல்படுத்தப்பட்ட வீடு உரித்துள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து சம்பளத்தில் 10 சதவீதம் வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 2008 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் ஊவா மாகாண சபையின் செயலாளர்களிடமிருந்தும் பிரதிப் பிரதான செயலாளர் களிடமிருந்து மாதமொன்றுக்கு ரூபா 500 பெயரளவிலான வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. | 2017 மார்ச் 23 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குக் குழு கட்டளையின் பரிந்துரை செயற்படுத்தப்பட வேண்டும் | மாகாண நிதியம் தொடர்பான கணக்கு குழு பரிந்துரையின் பிரகாரம் ஒரு மாதத்திற்குள் பொது கொள்கையொன்ற தயாரித்து தருமாறு 5/AC/FA/GA/20/19/09 ஆம் இலக்க 2019 மே 30 ஆந் திகதிய கடிதத்தில் பிரதான செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | பண்டாரவெல மாவட்ட வைத்தியசாலைக்குரிய 2.66 பேர்ச் அளவிலான காணியில் அனுமதியின்றி வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக நில அளவைத் திணைக்களத்தினால் 2013 பெப்ரவரி 25 ஆந் திகதி அறிக்கையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், வெளிமட ஆதார வைத்தியசாலை அமைந்துள்ள நியந்தகல பதன காணியில் 01 ஏக்கர் 0.8 பேர்ச் அளவில் அத்துமீரிய குடியிருப்பாளர்கள் நிரந்தர கட்டிட மொன்றை நிர்மாணித்துள்ளதாக கண்டறியப்பட்டிருந்தது, உரிய வைத்தியாசலைக்குரிய காணிகளின் எல்லைகளை சரி | 2017 மார்ச் 23 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குக் குழு கட்டளையின் பரிந்துரை செயற்படுத்தப்பட வேண்டும் | பண்டாரவெல மாவட்ட வைத்தியசாலைக்குரிய 5.0863 ஹெக்டேயர் பேர்ச் அளவிலான காணியின் பண்டாரவல பிரதேச செயலக பிரிவிற்குரிய பகுதியின் எல்லை தற்போது காட்டப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஹப்புத்தளை செயலக பிரிவிற்குரிய பகுதியின் எல்லை தற்போது தற்போது காட்டப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஹப்புத்தளை செயலக பிரிவிற்குரிய பகுதியின் எல்லைகளை தீர்வு செய்வதற்கு 2018-24 ஆம் |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்காக முறையான நடைமுறையொன்று எடுக்கப்படாதிருந்ததுடன், அத்துமீரிய குடியிருப்பாளர்களை காணிகளிலிருந்து அகற்ற 1979 இன் 07 ஆம் இலக்க அரசின் காணி (உரித்தை மீளப் பெற்றுக் கொள்ளல்) சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து சரியான உரித்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | இலக்க அளவீட்டு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வெளிமட ஆதார வைத்தியசாலைக்குரிய காணி தொடர்பாக 2019 யூன் 18 திகதி குறித்த தரப்பினருடன் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் குறித்த நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றது. மேற்கொள்ளப்படும் |
| (இ) | வெளிமட பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் அலகொலகால கிராம சேவையாளர் பிரிவின் மீபிலிமானவில் அமைந்துள்ள 11.056 ஹெக்டேயரிலான காணியில் வர்த்தக நடவடிக்கையொன்றிற்காக 30 ஆண்டு காலத்திற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு 2011 மே 09 ஆந் திகதி காணி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. காணி குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக குத்தகை உடன்படிக்கையை மேற்கொள்வதற்கோ குத்தகை உரித்தொன்றை தயாரிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபத்தினால் இக்காணியில் 19 ஏக்கர் அளவான காணி ஆண்டொன்றிற்கு ரூபா 2,755,000 குத்தகை வாடகைக்கு 2012 நவம்பர் 06 ஆந் திகதி முதல் | 2017 மார்ச் 23 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குக் குழு கட்டளையின் பரிந்துரை செயற்படுத்தப்பட வேண்டும் | இக்காணி பகுதி தொடர்பாக குத்தகையொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் வெளிமட பிரதேச செயலகம் அல்லது ஊவா மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் ஈடுபாடொன்று இல்லாமல் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முழு தற்றுனிபின் பேரில் இது இடம்பெற்றுள்ளது. அரசின் ஏதேனும் சேவை அல்லது அனுமதிப்பத்திரமொன்று இல்லாமல் தயாரிக்கும் போது அதற்குரிய அறவீடுகள் நிதிப்பிமாணங்களின் பிரகாரம் இடம்பெற வேண்டிய போதும் அது இச்செயற்பாட்டின் போது பூர்த்தி செய்யப்படாமையால் இப்பணத்தை அறவிடுவது நடைமுறைச்சாத்தியமற்றது. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் |

| | | |
|---|---|---|
| | பயிர்செய்கைக்காக தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், மாவட்ட விலை மதிப்பாளரின் 2012 யூன் 14 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 2012 இலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடமிருந்து ஊவா மாகாண சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 8,680,000 தொகையான குத்தகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கேள்வி நடைமுறை யொன்று பின்பற்றப்பட்டு மேற்கொள்ளபப்பட்ட செயற்பாடு தொடர்பாக பிரதேச செயலகம் அல்லது ஊவா மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்4டியநடைமுறை ரீதியான சந்தர்ப்பமொன்று காணப்படவில்லை. |

### 5.9 சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஊவா மாகாண சுகாதார அமைச்சினால் 2018 செப்தம்பர் 20 ஆந் திகதி வெள்ளவாய ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 6,000,000 ஆன நடமாடும் இன்சினேட்டர் இயந்திரத்தை பயன்பாட்டிற்கு எடுக்காமல் வைத்தியசாலையிலிருந்து அகற்றப்படும் கூரிய மற்றும் தொற்றுக்கழிவுகள் முறையற்ற வகையில் வெளியேற்றப்பட்டிருந்தன. | முறையற்ற தொற்றுக்கழிவுகள் வெளியேற்றுவதற்குப் பதிலாக இன்சினேட்டர் இயந்திரத்தை பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். | இன்சினேட்டரை நிறுவும் முதலாம் கட்ட நடவடிக்கைகள் இப்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இன்சினேட்டரின் பாதுகாப்பு மேவுகை நிர்மாணத்திற்காக இரண்டாம் கட்டத்திற்குரிய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது. அதன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதும் இயந்திரத்தை பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வெள்ளவாய ஆதார வைத்தியசாலையில் பயன்படுத்தப்படும் மல கழிவு முறைமை போதியளவில் இல்லாமையால் மழை காலங்களில் எப்போதும் மலக் கழிவுகள் வெளியேறிக் கொண்டிருக்கின்றது. | போதியளவில் மல கழிவு முறைமையொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறைந்த கிரயத்திலான வழிமுறையொன்று ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த நிதிஏற்பாடுகளின் கீழ் இதற்கான தீர்வொன்றை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளேன். |
| (இ) | தனமல்வில பிரதேச வைத்தியசாலையின் வார்ட்களிலிருந்தும் ஆய்வு கூடத்திலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுகள் கலந்த நீர் சுத்திரகரிக்கப்படாமல் மொனறாகல மாத்தறை பிரதான வீதியின் வடிகான் முறைமைக்கு வெளியேற்றப்பட்டு காணப்பட்டது. | கழிவுகளை வெளியேற்றுவதற்காக முறையான நடைமுறையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். | குறைந்த கிரயத்திலான வழிமுறையொன்று முன்மொழியப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அதனை செயற்படுத்தி தீர்வொன்றை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |